ஸ்ரீ சந்திரசேகர அஷ்டகம் தமிழில்
தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

1)

யோக ரத்தினங்கள் ஒளிர்கின்ற
மேரு மலையினையே வில்லாக்கி
நாக ரத்தினங்கள் அவைமின்னும்
நாகம் வாசுகியை நாணாக்கி
மாலன் விஷ்ணுவினை அம்பாக்கி
முப்புரம் அழித்த தெய்வமுனை
லோகம் மூன்றுமே வணங்கிடுமே !
வெள்ளி மலைமீது உறைபவனே !
சரணம் என்றுனை சேர்ந்ததினால்...
சிரத்தில் பிறைசூடும் ஹரசிவனே !
மரண தேவனும் என்செய்வான் ? - எனை
மரண தேவனும் என்செய்வான் ?
சந்திரசேகரா ! சந்திரசேகரா ! தயைக் காட்டு !
சந்திரசேகரா !சந்திரசேகரா ! காப்பாற்று ! (௨)

௨)

மோகம் மூட்டிடும் மன்மதனை
நெற்றிக் கண்ணாலே எரித்தவனே !
தேகம் முழுதுமாய் சாம்பலினை
நீறு என்றாக்கி தரித்தவனே !
சோகம் தரும்இன்னல் தீர்ப்பவனே !
முடிவு என்றிலா நிரந்தரனே !
வாசம் மணக்குமுன் திருப்பாதம்
ஐந்து கல்பமர மலர்சூழ....

PSDPRASAD MUSIC

ஸ்ரீ சந்திரசேகர அஷ்டகம் தமிழில்
தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

---

சரணம் என்றுனை சேர்ந்ததினால்...
சிரத்தில் பிறைசூடும் ஹரசிவனே !
மரண தேவனும் என்செய்வான் ? - எனை
மரண தேவனும் என்செய்வான் ?
சந்திரசேகரா ! சந்திரசேகரா ! தயைக் காட்டு !
சந்திரசேகரா !சந்திரசேகரா ! காப்பாற்று ! (௨)

௩)

ஆடை எனவாக மேனியிலே
அழகாய் கரித்தோல் பூண்டவனே !
பூவைப் போல்கண்ணன் மாலவனும்
பூவில் உறைகின்ற நான்முகனும்
போற்றிப் பணிவாரே எப்போதும்
உந்தன் தாமரை மலரடியை !
ஊற்றாய் கங்கையின் நீர்சிந்தி
தூய்மை ஆகுமே சடைமுடியே !
சரணம் என்றுனை சேர்ந்ததினால்...
சிரத்தில் பிறைசூடும் ஹரசிவனே !
மரண தேவனும் என்செய்வான் ? - எனை
மரண தேவனும் என்செய்வான் ?
சந்திரசேகரா ! சந்திரசேகரா ! தயைக் காட்டு !
சந்திரசேகரா !சந்திரசேகரா ! காப்பாற்று ! (௨)

PSDPRASAD MUSIC

ஸ்ரீ சந்திரசேகர அஷ்டகம் தமிழில்
தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

---

௪)

நாகக் கூட்டத்தை மேனியிலே
அணிகலன் ஆக்கித் தரித்தவனே !
தேக இடபாகம் அணிகலனாய்
தேவி பார்வதியைக் கொண்டவனே !
வானின் நிறக்கழுத்து கொண்டவனே !
பாகாட் சனையும் வென்றவனே !
மானை, மருவினை தரித்தவனே !
குபேரன் நண்பன் ஆனவனே !
சரணம் என்றுனை சேர்ந்ததினால்...
சிரத்தில் பிறைசூடும் ஹரசிவனே !
மரண தேவனும் என்செய்வான் ? - எனை
மரண தேவனும் என்செய்வான் ?
சந்திரசேகரா ! சந்திரசேகரா ! தயைக் காட்டு !
சந்திரசேகரா !சந்திரசேகரா ! காப்பாற்று ! (௨)

௫)

நாக குண்டலங்கள் பூண்டவனே
நாரதாதியோர் தொழுபவனே !
லோகம் மூன்றுக்கும் ஆண்டவனே !
தஞ்சம் என்பார்க்கு கற்பகமே !
நந்தி என்கின்ற காளையினை
வாகன மாகக் கொண்டவனே !
அந்தகாரனின் ஆணவத்தை
முற்றிலுமாக அழித்தவனே !
சரணம் என்றுனை சேர்ந்ததினால்...
சிரத்தில் பிறைசூடும் ஹரசிவனே !

PSDPRASAD MUSIC

ஸ்ரீ சந்திரசேகர அஷ்டகம் தமிழில்
தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்
-------------------------------------------------------------------------

மரண தேவனும் என்செய்வான் ? - எனை
மரண தேவனும் என்செய்வான் ?
சந்திரசேகரா ! சந்திரசேகரா ! தயைக் காட்டு !
சந்திரசேகரா !சந்திரசேகரா ! காப்பாற்று ! (2)

6)
மூன்று குணங்களின் திருவடிவே !
இன்னல் தீர்த்திடும் அருமருந்தே !
மூன்று கண்களைக் கொண்டவனே !
இடர்கள் நீக்கியேக் காப்பவனே !
கோபம் பொங்கவே தட்சனவன்
யாகம் அதனையே அழித்தவனே !
பாவம் யாவையையும் தீர்ப்பவனே !
பக்தியும், முக்தியும் தருபவனே !
சரணம் என்றுனை சேர்ந்ததினால்...
சிரத்தில் பிறைசூடும் ஹரசிவனே !
மரண தேவனும் என்செய்வான் ? - எனை
மரண தேவனும் என்செய்வான் ?
சந்திரசேகரா ! சந்திரசேகரா ! தயைக் காட்டு !
சந்திரசேகரா !சந்திரசேகரா ! காப்பாற்று ! (2)

7)
ஈடு என்றிலா பெரியவனே !
உலக உயிர்களின் நாயகனே !
யாரும் புரிந்திடா பரம்பொருளே !
பக்தர் போற்றிடும் பொக்கிஷமே !

PSDPRASAD MUSIC

ஸ்ரீ சந்திரசேகர அஷ்டகம் தமிழில்
தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

-------------------------------------------------------------------------

ஆடை என்றாக திசைகளையே
மகிழ்வுடன் சூடும் நிரந்தரனே !
நாடி வருகின்ற பக்தர்களை
காத்து அருளிடும் அன்பினனே !
சரணம் என்றுனை சேர்ந்ததினால்...
சிரத்தில் பிறைசூடும் ஹரசிவனே !
மரண தேவனும் என்செய்வான் ? - எனை
மரண தேவனும் என்செய்வான் ?

சந்திரசேகரா ! சந்திரசேகரா ! தயைக் காட்டு !
சந்திரசேகரா !சந்திரசேகரா ! காப்பாற்று ! (௨)

௮)

ஆக்கம் செய்வதும் நீதானே !
காக்கும் தெய்வமும் நீதானே !
காலம் வந்தவுடன் அண்டமிதை
முடித்து வைப்பதும் நீதானே !
மூன்று வேளையும் லீலைகளாய்
திருவிளையாடல் செய்பவனே !
சேர்ந்து உயிர்களில் நிறைந்தவனே !
உயிர்களின் தலைமகன் ஆனவனே !
சரணம் என்றுனை சேர்ந்ததினால்...
சிரத்தில் பிறைசூடும் ஹரசிவனே !
மரண தேவனும் என்செய்வான் ? - எனை
மரண தேவனும் என்செய்வான் ?
சந்திரசேகரா ! சந்திரசேகரா ! தயைக் காட்டு !
சந்திரசேகரா !சந்திரசேகரா ! காப்பாற்று ! (௨)

PSDPRASAD MUSIC

ஸ்ரீ சந்திரசேகர அஷ்டகம் தமிழில்
தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

---

கால பயத்திலே ம்ருகண்டர்
என்னும் முனிபடைத்த துதியிதனை
ஈசன் சன்னதியில் ஓதிடுவார்
கால பயமின்றி வாழ்ந்திடுவார் !
நீண்ட ஆயுளாய் நோயின்றி
செல்வ வளங்களுடன் வாழ்வாரே !
சடையில் பிறைசூடும் இறையருளால்
இறுதியில் முக்தியும் பெறுவாரே !
சந்திர சேகரன் திருவருளால்
இறுதியில் முக்தியும் பெறுவாரே !
சந்திர சேகரன் திருவருளால்
இறுதியில் முக்தியும் பெறுவாரே !
சந்திரசேகரா ! சந்திரசேகரா ! தயைக் காட்டு !
சந்திரசேகரா !சந்திரசேகரா ! காப்பாற்று ! (2)

PSDPRASAD MUSIC